அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம்
தேசிய மட்டத்திலான ”அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2021”
திருக்குறள் மனனம், ஒப்பித்தல் போட்டி - பிறந்த ஆண்டு 2009 (வளர்நிலை 6)
தெரிவுப்போட்டி: வளாகத்தில் அன்னைத் தமிழ்முற்ற இறுதிப்போட்டி: 27.03.2021 28.03.2021

---

1. அன்பிலா ரெல்லாந் தமக்குரியா ரன்புடையர்
ரென்பு முரியர் பிறர்க்கு. (72)

*அன்பிலாதவர் எல்லாப் பொருட்களையும் தமக்கே உடைமையாக்கிக் கொண்டு வாழ்வார். ஆனால் அன்புடையவரோ தம் உடலைக்கூடப் பிறருக்கு உரித்தாக்கி வாழ்வார்.*

2. ஒழுக்கம் விழுப்பம் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும். (131)

*ஒழுக்கமுடன் சிறப்பாக வாழ்தலே எல்லார்க்கும் மேன்மையைத் தரும். ஆதலால் அத்தகைய ஒழுக்கத்தை உயிரைவிடச் சிறந்ததாகப் போற்ற வேண்டும்.*

3. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. (542)

*உலகத்து உயிர்கள் அனைத்தும் மழையை எதிர்நோக்கித் தான் வாழ்கின்றன. இதுபோல குடிமக்களோ அரசனுடைய செங்கோலின் சிறப்பை எதிர்பார்த்து வாழ்கின்றனர்.*

4. சுற்றத்தாற் சுற்றப் படவொழுக்கல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன். (524)

*தன்னுடைய சுற்றத்தாரால் தான் சூழப்பட்டு இருக்கும் வகைகளை அறிந்து, அவர்களை அணைத்து வாழும் வாழ்க்கை ஒருவன் செல்வத்தைப் பெற்றதனாலுள்ள பயனாகும்.*

5. பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தரும். (892)

*அறிவிற் சிறந்த பெரியாரைப் பேணாமல் வாழ்ந்தால், அது அந்தப் பெரியாரால் நீங்காத துன்பத்தையே தரும்படி செய்துவிடும்.*

6. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
இகல்வெல்லல் யார்க்கு மரிது. (647)

*தான் எண்ணியவற்றைப் பிறர்க்குப் பொருந்தும் முறையில் சொல்ல வல்லவனாய், சோர்வு இல்லாதவனாய், அவைக்கு அஞ்சாதவனாய் இருப்பானாயின், அவனை மாறுபாடான கருத்துக்களுடன் வெல்லுவது என்பது மிகவும் அரிதாகும்.*

7. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
   சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. (981)

   *தமது கடமை என்று உணர்ந்து சான்றாண்மையை மேற்கொண்டு ஒழுகுவார்க்கு, நல்ல குணங்கள் எல்லாம் அவர்களுக்கு இயல்பாக இருக்கும்.*

8. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துக்
   தொல்படைக் கல்லா லரிது. (762)

   *போரின்போது சிதைவு வந்த இடத்தில் துன்பங்களுக்கு அஞ்சாமல், தொடர்ந்து போரிடும் மனத்திடம் முன்னோரைத் தொடர்ந்து வரும் பெருமையுடைய படைவீரர்கட்கு அல்லாமல் மற்றவர்கட்குக் கிடையாது.*